# கூட்டுறவுத் துறை

## மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், சென்னை மாவட்டம்.

கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர், சென்னை மண்டலம் அலுவலகம், எண்.91, தூய மேரி சாலை, அபிராமபுரம், சென்னை–600 018.

**விளம்பரம் எண்.1 / 2020** **நாள் : 19.06.2020**

### சென்னை மாவட்டத்தில் கூட்டுறவுச்சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத்திட்ட நியாயவிலைக் கடைகளுக்கு விற்பனையாளர் (Salesman) மற்றும் கட்டுநர் (Packer) காலிப் பணியிடங்களை நிரப்ப தகுதியானவர்களை தேர்வு செய்வதற்கான விளம்பரம்

| வ. எண். | நேரடி நியமனப் பதவி விவரம் | சம்பள விகிதம் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப் பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | நியாயவிலைக் கடைகளுக்கு விற்பனையாளர் (Salesman) | 1.தொகுப்பு ஊதியம் ரூ.5000/– (மாதம் ஒன்றுக்கு) நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை.<br>2.ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ.4300–12000/– | 1. திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம்<br>2.பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை<br>3.வடசென்னை கூட்டுறவு மொத்த விற்பனைப்பண்டகசாலை<br>4.பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகள் | 33<br>3<br>30<br>14 |
| | | | **கூடுதல்** | **80** |
| 2. | நியாயவிலைக் கடைகளுக்கு கட்டுநர் (Packer) | 1.தொகுப்பு ஊதியம் ரூ.4250/– (மாதம் ஒன்றுக்கு) நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை.<br>2.ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ.3900–11000/– | 1.திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம்<br>2.பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைப்பண்டகசாலை<br>3.வடசென்னை கூட்டுறவு மொத்த விற்பனைப்பண்டகசாலை<br>4.பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகள் | 113<br>15<br>38<br>26 |
| | | | **கூடுதல்** | **192** |

**2. நிபந்தனைகள்:–**

1.மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின்போது அரசுப் பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் வகுப்பு சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் கீழ்க்கண்டவாறு பின்பற்றப்படும்.

| பதவி | | வகுப்பு வாரி இட ஒதுக்கீடு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொதுப் போட்டி | பிற்படுத்தப் பட்டோர் | 'பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர்) | மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் | ஆதி திராவிடர் | ஆதி திராவிடர் (அருந்ததியர்) | பழங்குடியினர் | மொத்த காலிப் பணியிடம் |
| நியாய விலைக் கடைகளுக்கு விற்பனையாளர் (Salesman) | பின்னடைவு காலிப் பணியிடம் | 2 | – | 1 | 1 | – | – | – | 4 |
| | காலிப் பணியிடம் | 23 | 20 | 3 | 15 | 12 | 2 | 1 | 76 |
| | மொத்தம் | 25 | 20 | 4 | 16 | 12 | 2 | 1 | 80 |
| நியாய விலைக் கடை களுக்கு) கட்டுநர் (Packer) | பின்னடைவு காலிப் பணியிடம் | 2 | 6 | 3 | 2 | 1 | 3 | – | 17 |
| | காலிப் பணியிடம் | 53 | 47 | 6 | 35 | 27 | 5 | 2 | 175 |
| | மொத்தம் | 55 | 53 | 9 | 37 | 28 | 8 | 2 | 192 |

2. நியமனத்தின்போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீட்டு எண்ணிக்கை தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.
3. ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் (கண் பார்வையற்றோர் தவிர) , முன்னாள் ராணுவத்தினர் மற்றும் தமிழ் வழிக் கல்வி பயின்றோர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், இந்த நியமனத்தின்போதும் தகுதியின் அடிப்படையில் பின்பற்றப்படும்.(தமிழ் வழிப் பயின்றோர் என்போர் இப்பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியினை தமிழ் வழியில் (Tamil Medium) படித்தோர் ஆவர்) .
4. மாற்றுத் திறனாளிகளில் பார்வைத்திறனற்ற நபர்கள் விண்ணப்பிக்க இயலாது.
5. உடற்தகுதிச் சான்றிதழ்: மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணபதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்குக் குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி பதவிகளுக்கான பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பெற்ற சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டும்.
6. பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை சான்று வருவாய் கோட்டாட்சியர் நிலைக்குக் குறையாத அலுவலரிடமிருந்து பெற வேண்டும்.
7. ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிடர் அருந்ததியர் சான்று வருவாய் வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத அலுவலரிடமிருந்து பெற வேண்டும்.
8. மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம் சான்று வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத வருவாய்த்துறை அலுவலர் (அ) தலைமையிடத்து துணை வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத அலுவலரிடமிருந்து பெற வேண்டும்.
9. மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் மேல் முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்பட வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

3. தகுதிகள்:–

அ. வயது (01.01.2020 அன்று)

1.விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது 01.01.2002 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்.)

| | வகுப்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|
| i) | ஆதி திராவிடர், ஆதிதிராவிட அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் அனைத்து வகுப்பினைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| ii) | மேற்படி வகுப்பினைச் சாராத இதர விண்ணப்பதாரர்கள் (OC ) | 30 வயது |

முன்னாள் இராணுவத்தினர், ஆதரவற்ற விதவைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசாணைப்படி வயது வரம்பு விலக்களிக்கப்படும்.

ஆ. கல்வித் தகுதிகள்:–

1. நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள்:–மேல்நிலை வகுப்பு தேர்ச்சி (+2 தேர்ச்சி) பெற்றிருத்தல் வேண்டும் (+2 Pass)
2. நியாயவிலைக் கடை கட்டுநர்கள்:– பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி (பத்தாம் வகுப்பு தேர்ச்சி) பெற்றிருத்தல் வேண்டும் (10th Standard Pass)

4. தமிழ் மொழித் திறன்:–

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழ் மொழியில் எழுதப் படிக்க திறன் உள்ளவராக இருக்க வேண்டும்.

5. தெரிவு முறை:–

மேற்படி காலிப் பணியிடங்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியலில் இடம் பெற்றவர்கள் மற்றும் இந்த விளம்பரத்தின் அடிப்படையில், விண்ணப்பிக்கும் தகுதியுடையவர்கள் ஆகியவர்களுக்காக நடத்தப்படும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு நிரப்பப்படும். இப்பணியிடங்களுக்கு தகுதியான விண்ணபதாரர்கள் நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் வகுப்பு வாரி சுழற்சி மற்றும் காலிப் பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணபதாரர்கள் கட்டாயமாக நேர்முகத் தேர்வுக்கு வருகை புரிய வேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணபதாரர்கள் மேற்படி பணியிடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள்.

6.காலிப் பணியிடங்களுக்கான விருப்பம் தெரிவித்தல்.

விண்ணபதாரர்கள் தாங்கள் எந்த நிறுவனத்தின் நியாய விலைக் கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான விருப்பத்தை விண்ணபத்திலும் நேர்முகத் தேர்வின் போதும் தெரிவிக்க வேண்டும். விண்ணபதாரர்களின் அடிப்படை விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கான பணியிடம் ஒதுக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டால் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது.

7. விண்ணப்பங்கள் விநியோகித்தல்:–

மேற்படி நியாயவிலைக் கடை விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணி நியமனங்களுக்கான விண்ணப்பப் படிவத்தை கூடுதல் பதிவாளர், சென்னை மண்டலம் அலுவலகம், எண்.91, தூய மேரி சாலை, அபிராமபுரம், சென்னை–600 018, என்ற முகவரியில் 06.07.2020 முதல் 31.07.2020 வரை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

8. விண்ணப்பக் கட்டணம்:–

ஆதிதிராவிடர், ஆதிதிராவிட அருந்ததியர், பழங்குடியினர் , மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற விதவைகள் இந்த விண்ணப்பக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை. நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் நியமனத்திற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.150/– மற்றும் நியாய விலைக்கடை கட்டுநர்கள் நியமனத்திற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.100/–.

மேற்படி கட்டணம் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், சென்னை மாவட்டம், (DISTRICT RECRUITMENT BUREAU, CHENNAI) என்ற பெயரில் வரைவோலையாக (DEMAND DRAFT) எடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் எண் மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான பெயர் மற்றும் விண்ணபதாரரின் பெயர் ஆகியவை வரைவோலையின் பின்புறம் எழுதப்பட வேண்டும்.

வேலை வாய்ப்பகத்தால் பரிந்துரைக்கப்படும் பட்டியலில் இடம் பெற்றவர்களும் இந்த விண்ணபத்தை பெற்று உரிய விண்ணப்பக் கட்டணத்துடன்அவர்களது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

9. விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள்:–

விண்ணபதாரர்கள் விண்ணபத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களையே இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும், அசல் சான்றிதழ்களை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பக்கூடாது. சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்கள், இணைக்கப்படாமல் அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

10. நேர்முகத் தேர்வு:–

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணபதாரர்கள் அவர்களுடைய விண்ணபத்தில் குறிப்பிட்ட தபால் முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணபதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணபதாரர்கள் எந்த நிலையிலும், பணி நியமனம் தொடர்பாக எந்த உரிமையும், கோர இயலாது. நேர்முகத் தேர்விற்குத் தகுதியான விண்ணபதாரர் அழைக்கப்படும் பட்சத்தில் விண்ணபதாரருக்கு நேர்முகத் தேர்வில் கலந்துக் கொள்ள பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது. எக்காரணத்தை முன்னிட்டும் அஞ்சல் தாமதத்திற்கான காரணங்களுக்கு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பேற்காது.

11. தடையில்லாச் சான்றிதழ்:–

விண்ணபதாரர்கள் ஏற்கனவே பணிபுரிபவர்களாக இருக்கும்பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தேவையான தடையில்லாச் சான்றிதழினை பெற்று நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

12. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பெறுதல்

1. விண்ணபதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்கள் பந்து முனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். விண்ணபதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணபதாரர் கட்டாயம் கையொப்பம் இட வேண்டும். கையொப்பம் இல்லாமல் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பப் படிவத்தில் அனைத்து கலங்களும், விண்ணபத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். உரிய சான்றிதழ்களின் நகல் இணைக்கப்பட வேண்டும்.
4. விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பக் கட்டணத்திற்கான வரைவோலை தவறாமல் இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணபதாரர் அவரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுவதுடன் தனியாக ஒரு புகைப்படத்தினை இணைக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தபால் மூலம் **மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், சென்னை மாவட்டம், கூடுதல் பதிவாளர், சென்னை மண்டலம் அலுவலகம், எண்.91, தூய மேரி சாலை, அபிராமபுரம், சென்னை–600 018 என்ற முகவரிக்கு 31.07.2020 மாலை 5.45க்கு** முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ள மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தில் **நேரில் 31.07.2020 மாலை 5.45க்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.** 31.07.2020 மாலை 5.45 பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது. எக்காரணத்தை முன்னிட்டும், அஞ்சல் தாமதத்திற்கு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பேற்காது.

**கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்/ தலைவர்,**
**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், சென்னை மாவட்டம்**

செ.ம.தொ.இ./563/வரைகலை/2020

## கூட்டுறவுத்துறை

**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் சென்னை மாவட்டம்**
**கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர், சென்னை மண்டலம்அலுவலகம்,**
**எண்.91, தூய மேரி சாலை, அபிராமபுரம்,சென்னை–600 018.**

## திருத்த அறிவிப்பு

19.06.2020 அன்றைய தினமணி நாளிதழில் 5–வது பக்கத்தில் கூட்டுறவுத்துறை, மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், சென்னை மாவட்டம் என்ற பெயரில் விளம்பர எண். 1/2020–இல் வெளியிடப்பட்ட, சென்னை மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்ட நியாயவிலைக் கடைகளில் உள்ள விற்பனையாளர் மற்றும் கட்டுநர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பில், வரிசை எண். 7–இல் குறிப்பிட்டுள்ள முகவரியிலுள்ள அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவேண்டும் என்பதற்குப் பதிலாக விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியிலுள்ள அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப் படிவம் அல்லது **www.chndrb.in** என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி 06.07.2020 காலை 10.00 மணி முதல் 31.07.2020 மாலை 05.00 மணி வரை விண்ணப்பிக்கலாம் என திருத்தம் செய்து அறிவிக்கப்படுகிறது.

**கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்/ தலைவர்,**
**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், சென்னை மாவட்டம்**

## கூட்டுறவுத்துறை

**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் சென்னை மாவட்டம்**
**கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர், சென்னை மண்டலம்**
**அலுவலகம், எண்.91, தூய மேரி சாலை, அபிராமபுரம்,சென்னை–600 018.**

## திருத்த அறிவிப்பு

19.06.2020 அன்றைய தினத்தந்தி நாளிதழில் 7–வது பக்கத்தில் கூட்டுறவுத்துறை, மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், சென்னை மாவட்டம் என்ற பெயரில் விளம்பர எண். 1/2020–இல் வெளியிடப்பட்ட, சென்னை மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்ட நியாயவிலைக் கடைகளில் உள்ள விற்பனையாளர் மற்றும் கட்டுநர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பில், வரிசை எண். 7–இல் குறிப்பிட்டுள்ள முகவரியிலுள்ள அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவேண்டும் என்பதற்குப் பதிலாக விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியிலுள்ள அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப் படிவம் அல்லது **www.chndrb.in** என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி 06.07.2020 காலை 10.00 மணி முதல் 31.07.2020 மாலை 05.00 மணி வரை விண்ணப்பிக்கலாம் என திருத்தம் செய்து அறிவிக்கப்படுகிறது.

**கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர்/ தலைவர்,**
**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், சென்னை மாவட்டம்**